பக்கங்கள்: 08 விலை : 20/-

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 17 சனிக்கிழமை 30.05.2020 கதிர் 74

## 1,563 பேருக்கு கொரோனா!

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 18 பேர் இன்று இதுவரை இனங்காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய, தொற்றாளர்களின் எண்ணிக்கை 1563 ஆக அதிகரித்துள்ளது.

2

# தமிழர்களுக்குரிய தீர்வை கோட்டா தடுக்கமுடியாது!

## இடித்துரைக்கிறார் இரா. சம்பந்தன்

கொழும்பு, மே 30

தமிழ் மக்களுக்குத் தீர்வு கிடைப்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் தடுக்க முடியாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம் பந்தன் தெரிவித்தார்.

சூரியன் எவ்.எம். வானொலியில் இன்று காலை ஒலிபரப்பான 'விழுதுகள்' நிகழ்ச்சியிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

2



## கொரோனாவை வைத்து இராணுவமயப்படுத்தல்!

### அடைக்கலநாதன் குற்றச்சாட்டு

கொழும்பு, மே 30

வடக்கில் கொரொனா அச்சுறுத்தலை அடிப்படையாகக் கொண்டு தொடர்ந்தும் இராணுவ மயப்படுத்தல் செயற்பாடுகள் இடம்பெற்று வருகின்றமை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் விசனம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு மாகாணம் இராணுவ மயப்படுத்தலுக்குள்ளாக்கப்பட்டு வருவது தொடர்பாக நாம் தொடர்ந்தும் சுட்டிக்காட்டி வந்திருந்தோம். எனினும் இது தொடர்பில் ராஜபக்ச அரசு எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காத நிலையில் எமது மக்கள் சொல்லொணா

2

## ரணில் அணிக்கு சஜித் குழு பதிலடி

கொழும்பு, மே 30

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு எடுத்துள்ள தீர்மானத்தை நிராகரிக்கின்றோம். அதனை ஏற்கமுடியாது. சட்டரீதியாக சவால்களை எதிர்கொள்வோம் - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

பொதுத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து போட்டியிடும் நபர்கள் மற்றும் அந்தக் கூட்டணிக்கு ஆதரவு வழங்குபவர்கள் என 99 பேரின் கட்சி உறுப்புரிமையை நீக்குவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு அனுமதி வழங்கியுள்ளது.

தன்னிலை விளக்கம் அளிப்பதற்குக் காலக்கெடுவும் விதிக்கப்பட்டுள்ளது. அதுவரை ஐ.தே.கவில் வகித்த பதவிகளில் இருந்து அவர்கள் நீக்கப்பட்டுள்ளனர். பிரதித் தலைவர் பதவியில் இருந்து சஜித் தூக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ரஞ்சித் மத்தும பண்டார, ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களும்,

2

## முதலாம் திகதி தொடக்கம் 33 ரயில்கள் சேவையில்

கொழும்பு, மே 30

ஜூன் முதலாம் திகதி முதல் 33 ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

19,593 பேர் வேலைக்காகப் பயணிக்க ரயில்வே திணைக்களத்தில் பதிவு செய்துள்ளதாக ரயில்வே பொது முகாமையாளர்டிலந்தபெர்னாண்டோ தெரிவித்தார்.

இதேவேளை, அடுத்த வாரம் முதல் 5000 க்கும் மேற்பட்ட பஸ்களைச் சேவையில்

2

## மீண்டும் ராணுவ ஆட்சிக்கு கோட்டாவின் அரசு திட்டம்!

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மே 30

தமிழ் மக்களின் ஜனநாயக ரீதியான உரிமைக் குரல்களை நசுக்கி, மீண்டும் ஒரு இராணுவ ஆட்சியை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்வதாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் சட்டத்தரணியுமான வி.மணிவண்ணன் குற்றம் சுமத்தியுள்ளார்.

நாகர் கோயில் குண்டுவெடிப்பு சம்பவம், அமைச்சுக்களின் செயலாளர்களாக இராணுவ அதிகாரிகள் நியமனங்கள்

2



## நாட்டில் இயல்புநிலை

### கூறுகின்றார் மைத்திரி

கொழும்பு, மே 31

நாடு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

கண்டியில் இன்று சனிக்கிழமை ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

எதிர்வரும் பொதுத் தேர்தலை இலக்காகக் கொண்டு ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஶ்ரீலங்கா சுதந்திர பொதுஜன பெரமுனவும் பிரசாரத்தை முன்னெடுக்க தயாராக உள்ளன.

கொரோனா வைரஸ் நெருக்கடியால் தேர்தல் நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. பொதுத் தேர்தலில் வெற்றியைப் பெற இப்போது அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

அத்தோடு தற்போது தேர்தலை நடத்துவதற்கான சூழல் நாட்டில் இல்லை என்ற கருத்தை நான் நிராகரிக்கிறேன் - என்றார்.

# மாளிகாவத்தையில் துப்பாக்கிச் சூடு!

## ஒருவர் படுகாயம்

கொழும்பு, மே 30

மாளிகாவத்தையில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

பாதாள உலக கோஷ்டிகளுக்கு இடையில் நீண்டகாலம் நிலவும் பகைமையின் விளைவால் இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

39 வயதுடைய ரவூப் என்ற படுகாயமடைந்த நபர், முன்னாள் பிரபல தாதா மாமாஸ்மியின் சகா என பொலிஸார் தெரிவித்தனர்.

மாளிகாவத்தையில் இப்போது பிரவேசித்துள்ள இராணுவம் அங்கு தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. கொழும்பு போதனா வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப் பட்டுள்ள அவரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகக் கூறப்பட்டது.

# மீகஹதென்னவில் தீ வீட்டில் மூவர் காயம்

மீகஹதென்ன, பஹல ஹேவிஸ்ஸ தபால் நிலையத்திற்கு அருகிலுள்ள வீடொன்றில் நேற்றிரவு திடீரென தீ பரவியதில், மூவர் படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அந்த வீட்டிலிருந்த இரண்டு ஆண்களும் பெண் ஒருவருமே எரிகாயமடைந்த நிலையில், நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என மீகஹதென்ன பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தீப் பரவல் எரிவாயு கசிவினாலேயே ஏற்பட்டிருக்கின்றது என பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மீகஹதென்ன பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிவித்துள்ளனர்.

## கொரோனாவை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துன்பத்திற்குள்ளாகி வருகின்றனர்.

இலங்கையின் எப்பாகத்திலும் இல்லாத அளவுக்கு இராணுவச் சோனைச் சாவடிகளும் ரோந்து நடவடிக்கைகளும் இராணுவ நடமாட்டமும் வடக்கில் தலைதூக்கியுள்ளன. இது எமது மக்களை அச்சத்திற்குள்ளும் யுத்த மனோபாவத்திற்குள்ளும் வைத்திருப்பதற்காகவா என எண்ணத் தோன்றுகின்றது.

தற்போது கொரோனா தொற்றைக் காரணம் காட்டி வடக்கில் மேலும் இராணுவப் பிரசன்னம் அதிகரித்துள்ளது. பொலிஸாருக்கு வழங்கப்படவேண்டிய சிவில் நிர்வாக செயற்பாடுகளை இராணுவத்திற்கு வழங்கி வடக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்கவே இந்த அரசு முற்படுவதாக தோன்றுகின்றது.

அதேவேளை, இலங்கை முகம் கொடுக்கவுள்ள தேர்தலில் தமிழ் மக்களை அடக்கி வைத்திருந்து தென்னிலங்கையில் தம்மை ஒரு வீரனாகக் காட்டவே இந்த ஜனாதிபதியும் பிரதமரும் எண்ணுகின்றனர்.

தமிழர்களைத் தொடர்ச்சியாக அடக்குவதனால் தமது வெற்றியை இலகுவாக்கலாம் என எண்ணக்கோட்டை கட்டும் பேரினவாத அரசுக்கு தமிழ் மக்கள் தகுந்த பாடத்தை எதிர்வரும் தேர்தலில் காட்டுவார்கள் என்பது திண்ணம்.

இராணுவப் பிரசன்னம் என்பது சர்வதேச விதிமுறைகளுக்கு அமையவே காணப்பட வேண்டும். எனினும் சர்வதேச ஒழுக்கநெறியை மீறி செயற்படும் இந்த அரசு தமிழ் மக்களை அடக்கி சாதிக்க நினைப்பவைகளை ஈடேற்ற தமிழ் தேசியக்கூட்டமைப்பு என்றும் தடையாகவே இருக்கும் என்றார்.

## 1,563 பேருக்கு ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைரஸ் தொற்றிலிருந்து 781பேர் குணமடைந்துள்ள அதேவேளை, 770 பேர் தொடர்ந்தும் சிகிச்சைப்பெற்று வருகின்றனர்.

## ரணில் அணிக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவாளர்களும் எம்முடனேயே இருக்கின்றனர். செயற்குழு உறுப்பினர்களில் 50 வீதத்துக்கும் அதிகமானவர்கள் எமது அணியில் இருக்கின்றனர். செயற்குழு வழங்கிய அனுமதியின் பிரகாரமே புதிய கூட்டணி அமைக்கப்பட்டது.

எனவே, தன்னிச்சையான முறையிலேயே எம்மை நீக்கும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இதனை நாம் நிராகரிக்கின்றோம். சவாலுக்குட்படுத்தப்படுமானால் சட்டரீதியாக எதிர்கொள்வோம்.

ஐக்கிய தேசியக்கட்சியினர் என தற்போது கூறிக்கொள்ளும் சிறு குழுவினருக்கு அரசுடன் 'டீல்' இருக்கின்றது. இதன்காரணமாகவே எமது காலைவாருவதற்கு முயற்சிக்கின்றனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது இந்த குழுவே எமக்கு எதிராக செயற்பட்டு, வெற்றியைத் தடுத்தது.

அதேவேளை, உள்ளாட்சிமன்ற உறுப்பினர்களை மிரட்டும் செயலில் ரணில் தரப்பு ஈடுபட்டுள்ளது. எமக்கு ஆதரவு வழங்கினால் பதவி பறிக்கப்படும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். எனவே, இப்படியான டீல்காரர்களுக்கு மக்கள் பாடம் புகட்டவேண்டும்.

இவர்களிடம் இருந்து கட்சியையும், தலைமையகத்தையும் பாதுகாக்க வேண்டும். அதனை நாம் செய்வோம். - என்றார்.

## முதலாம் திகதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடுத்த திட்டமிட்டுள்ளதாக இலங்கைப் போக்குவரத்துச் சபை அறிவித்துள்ளது.

ஏற்கனவே 4800 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன எனவும் இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் கூறினார்.

மேலும், இடைக்கால பயணங்களுக்காக 3200 தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடுத்தப்படும் என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## தமிழர்களுக்குரிய தீர்வை கோட்டா ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு-

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வேண்டி நாங்கள் வெகுதூரம் பயணித்துத்துளோம். ஆட்சி அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு அவை மாகாணங்கள் அல்லது பிராந்தியங்களுக்கு ஒப்படைக்கப்படவேண்டும். அதியுச்ச அதிகார அடிப்படையில் - மக்களுடைய இறைமையின் அடிப்படையில் அந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி கணிசமான சுயாட்சியை வடக்கு -கிழக்கில் நாங்கள் பெற வேண்டும். இதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம்.

இன்றைக்கு சர்வதேசசமூகம் எங்களுடைய நிலைமைகளை நன்றாக உணர்ந்திருக்கின்றது. தெளிவாகப் புரிந்திருக்கின்றது. எல்லாவற்றையும் அவதானித்துக் கொண்டிருக்கின்றது. விசேடமாக இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், நோர்வோ மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்ற நாடுகள் இலங்கை தொடர்பான கருமத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றன. அந்த நாடுகளுக்கு இலங்கை அரசால் பல்வேறு வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும்.

### மக்கள் நம்பிக்கை

எமது மக்கள் மீது எங்களுக்கு நம்பிக்கை இருக்கின்றது. அவர்களும் எங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளார்கள். அவர்களுக்கு நாங்கள் துரோகம் செய்யமாட்டோம். அது அவர்களுக்குத் தெரியும். நாங்கள் நிதானமாக - அமைதியாக - பக்குவமாகச் செயற்படுவோம் என்று தமிழ் மக்களுக்கு நன்றாகத் தெரியும். நாங்கள் அரசியலுக்கு எங்களுக்காக வரவில்லை. தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும் என்பதற்காகவே அரசியலுக்கு வந்தோம்.

எமது மக்கள் நீண்டகாலமாக எமது கொள்கைகளில் நம்பிக்கை வைத்து - எங்களை ஆதரித்து எங்களைப் பெருமளவில் நாடாளுமன்றத்துக்கு அனுப்பி தங்களுடைய ஏகப்பிரதிநிதிகளாக எம்மைத் தெரிவுசெய்திருக்கின்றார்கள். அதுதான் எமது முதல் பலம் - முதல் தைரியம். அந்தப் பலத்தில்தான் மற்றவையெல்லாம் தங்கியிருக்கின்றன. மக்களை நாம் நம்புகின்றோம். சர்வதேசம் எங்களைக் கைவிடாது என்று நம்புகின்றோம். சர்வதேசம் எங்களைக் கைவிடாமல் செயற்படுவதற்குத் தேவையான அழுத்தங்களைக் கொடுக்கின்றோம்; கொடுத்துக்கொண்டு இருக்கின்றோம். தொடர்ந்தும் கொடுப்போம். கூடியளவு விரைவில் கொடுப்போம்.

### கோட்டாவை நாம் நிற்கவில்லை

ராஜபக்ஷக்களைப்பொறுத்தவரையில் விசேடமாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பொறுத்தவரையில் அவர் பதவிக்கு வந்தது பெரும்பானமை இன மக்களின் வாக்குகளுடன் மாத்திரம்தான். சிறுபான்மை இன மக்கள் மத்தியில் அவர் பிரசாரம்கூடச் செய்யவில்லை. ஜனாதிபதியாக வருவதற்கு சிறுபான்மை சமூகத்தின் வாக்குகளை அவர் கேட்கவில்லை; பெறவில்லை. அவரை நம்பி நாங்கள் நிற்கவில்லை. அவர் உண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவரை உண்மையை ஏற்றுக்கொள்ள வைக்க வேண்டும்.

உண்மையின் அடிப்படையில் - நீதியின் அடிப்படையில் - நியாயத்தின் அடிப்படையில் - சமத்துவத்தின் அடிப்படையில் தமிழருக்கு ஒரு தீர்வு கிடைப்பதை அவரால் தடுக்க முடியாது. எவராலும் தடுக்க முடியாது. அது எங்களுடைய அடிப்படை உரிமை. தமிழ்பேசும் மக்கள் - விசேடமாக வடக்கு, கிழக்கில் வாழும் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் அது எங்களுடைய அடிப்படை உரிமை. அந்த உரிமையை எவரும் மறுக்க முடியாது. அதை நாங்கள் பெறுவோம்.

### போர்க்குற்றச்சாட்டுக்கள்

இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணை தொடர்பில் சில சர்வதேச ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இலங்கை மீது பிரேரணைகளும் கொண்டுவரப்பட்டுள்ளன. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இந்தப் பிரேரணைகளைக் கொண்டு வந்த நாடுகளுடன் சேர்ந்து அந்தச் சபையின் உறுப்புரிமையிலுள்ள ஏனைய நாடுகளும், இலங்கையும் ஒத்துழைத்து சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அந்தத் தீர்மானங்கள் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடு. அந்த நிலைப்பாட்டிலிருந்து நாம் ஒருபோதும் விலகமாட்டோம். அடுத்த வருடம் பங்குனி மாதம் அந்த விடயம் தொடர்பில் ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டும். அந்த விடயம் தொடர்பில் தற்போது பல கருமங்கள் நடைபெறுகின்றன. அதைப் பற்றி தற்போது நான் பகிரங்கமாக பேச வேண்டிய அவசியம் இல்லை.

### குழும்பமாட்டோம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் ஒற்றுமையாகச் செயற்படுகின்றோம். ஒருமித்துச் செயற்படுகின்றோம். கருத்து வேறுபாடுகள் இருந்தால் நாங்கள் பேசித் தீர்த்துக்கொள்கின்றோம். எங்களைக் குழப்புவதற்குப் பலர் முயற்சிப்பார்கள். பலர் முயற்சிக்கின்றார்கள். ஊடகங்களும் முயற்சிக்கின்றன. ஆனால், நாங்கள் குழம்பமாட்டோம். நாங்கள் மிகவும் அமைதியாக - பக்குவமாக இருந்து எமது கருமங்களை உறுதியாக முன்னெடுப்போம். அது உறுதி.

### அரசியல் கைதிகள்

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. ஏற்கனவே பல கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளார்கள். மற்றவர்களும் விடுவிக்கப்பட வேண்டும் - என்றார்.

## மீண்டும் ராணுவ ஆட்சிக்கு கோட்டாவின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆகியவை தமிழ் மக்களை அச்ச நிலைக்குள் வைத்திப்பதற்காக அரசு எடுத்த நடவடிக்கைகள் என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்படும் கைது நடவடிக்கை தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது யாழ்ப்பாணத்திலுள்ள மக்களை அச்சுறுத்தும் மற்றுமொரு நடவடிக்கை அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் வடமராட்சி நாகர் கோயிலடியில் குண்டு வெடிப்புச் சம்பவம் ஒன்று பதிவாகியிருந்தது.

இந்தக் குண்டுவெடிப்பு, பொலிஸாரை இலக்கு வைத்து நடத்தப்பட்டது என்றும் அதில் பொலிஸார் காயங்களுக்கு உள்ளாக்கப்பட்டனர் என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.

இச்சம்பவம் தொடர்பில் பயங்கரவாதக் குற்றத்தடுப்புப் பிரிவினரால் குடவத்தைப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் சிலரை தேடும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

உண்மையிலேயே இந்தச் செய்திகள் என்பது தமிழ் மக்களை அச்சுறுத்துகின்ற அல்லது பயங்கரவாத தடைச் சட்டம் தொடர்பான அச்சத்தை மீண்டும் ஏற்படுத்துகின்ற நடவடிக்கையாகவே நாங்கள் பார்க்கின்றோம்.

மீண்டும் ஓர் இராணுவ ஆட்சியின் தொடக்கப் புள்ளியாகவே இதை பார்க்க வேண்டும். குறிப்பாக நாடு முழுவதிலும் பல அமைச்சுக்களின் செயலாளர்களாக இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

நாடு மீண்டும் ஒரு பயங்கரமான சூழலுக்குள் தள்ளப்படுவதையே இந்த நியமனங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

குறிப்பாக தமிழ் மக்கள் மீண்டும் ஒரு அச்ச நிலைக்குள் தள்ளப்படுகின்றார்கள் என்பதையே அரசு தனது செயற்பாடுகள் ஊடாகத் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தி வருகின்றது.

தமிழ் மக்களின் ஜனநாயகம் ரீதியான உரிமை குரலை அல்லது உரிமைக்கான போராட்டங்களை பயங்கரவாத தடைச் சட்டம் கொண்டு நசுக்குகின்ற அரசின் செயற்பாட்டின் ஆரம்பப் புள்ளியாக இவை அமைகின்றது என்பதை ஊகிக்க கூடியதாக உள்ளது - என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## கூட்டமைப்பின் திட்டம் யாது?

தமிழர்கள் தமக்கு உரியதை – தங்கள் உரிமையை – பேசலாம். கோரலாம். அதனைத் தங்களது அபிலாஷைகளாக முன்நிறுத்தலாம்.

அதில் தவறில்லை. அது நியாயமானதும் கூட. உரிமையை உரிமையுடன் கோருவது நியாயமானது. அதை யாரும் தப்பு என்று சொல்லப் போவதில்லை.

ஆனால், அந்த உரிமையைக் கோருகின்ற நம்மிடம் அதைப் பெற்றுநிலைநாட்டுவதற்கான தெளிவான திட்டம் – உருப்படியான தீர்க்கதரிசனப் பார்வை – நியாயமான வழிமுறை – இருக்க வேண்டும்.

அது இருந்தால் மட்டுமே அந்த உரிமையை – இலக்கை – நாம் எட்ட முடியும். எமது அபிலாஷை சாத்தியமாகும்.

வெறுமனே இது எமது உரிமை, அதைக் கிடப்பதை யாருமே தடைசெய்ய முடியாது, எவருமே தடுக்க முடியாது என்று மந்திர உச்சாடனம் போலக் கூறிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

முதலில் உரிமைக் கோரிக்கை என்றால், அடுத்து அதை எட்டுவதற்கான திட்டவட்டமான வழிகாட்டல் பாதை இருக்க வேண்டும். மூன்றாவதாக அதை – அந்தத் திட்டத்தை – எட்டுவதற்கான பாதையில் திடசங்கற்பத்துடனும், பற்றுறுதியுடனும் செயற்படும் ஓர்மம் இருக்க வேண்டும்.

இந்த மூன்றும் இருந்தால்தான் அரசியல் பயணம் தெளிவானதாகவும் இலக்கை நோக்கு நகர்வதாகவும் இருக்கும்.

சரியோ, பிழையோ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடம் தன்னுடைய போராட்டம் தொடர்பில் தெளிவான பார்வை இருந்தது. திட்டவட்டமான இலக்குகள் இருந்தன. அதை நோக்கி நகர்வதற்கான திடசங்கற்பம், பற்றுறுதி எல்லாம் அவரிடம் இருந்தன. இறுதி இலக்கை எட்ட முடியாவிட்டாலும் தெளிவான ஒரு பாதையில் அவரால் முன்னேற முடிந்தது.

ஆனால், ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களிடம் இப்போது தங்களின் அரசியல் நகர்வு தொடர்பில் ஒரு தெளிவான பார்வையோ, திட்டவட்டமான செல்நெறியோ இல்லவே இல்லை என்பதுதான் யதார்த்த நிலைமையாகும்.

இன்று ஊடகம் ஒன்றுக்குப் பேட்டியளித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தீர்வு தொடர்பில் பின்வருமாறு தெரிவித்திருக்கின்றார்.

“உண்மையின் அடிப்படையில், நீதியின் அடிப்படையில், சமத்துவத்தின் அடிப்படையில், எமக்குத் தீர்வு கிடைப்பதை எவரும் தடுக்க முடியாது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினாலும் அதைத் தடுக்க முடியாது. வடக்கு, கிழக்கு எமது சரித்திரபூமி. அது எமது அடிப்படை உரிமை. அந்த நியாயமான தீர்வை அடைவதை யாராலும் தடுக்க முடியாது” என்று கூறியிருக்கின்றார் சம்பந்தன்.

இது, மக்களுக்கு வெறும் உணர்ச்சியூட்டும் கருத்தே தவிர, அரசியல் அர்த்தம் பொதிந்த கருத்தாடலே அல்ல.

நமக்கு உரிமை உள்ளது என்பதற்காக அது தேடி வந்து நமது மடியில் விழுந்து விடாது. நாம்தான் அதைத் தேடிப் போராடி நிலைநிறுத்த வேண்டும். எழுபது ஆண்டு கால அரசியல் சரித்திரம் – பட்டறிவு – அந்தப் பாடத்தைத் தமிழர்களுக்கு நன்றாகவே போதித்து விட்டது.

இனியும் மந்திரத்தால் மாங்காய் விழும் என்று எதிர்பார்த்து எங்கள் மடியைப் பார்த்துக் கொண்டு வாளாவிருக்க முடியாது.

இனியாவது மாங்காய் பிடுங்குவதற்காக நாம் ஏதேனும் வழிகளை நாட வேண்டும்.

அந்த வழிவகை யாது, எப்படி அமையும் என்பது தொடர்பில் கூட்டமைப்பின் தலைமையிடம் தீர்க்க தரிசனம் மிக்க – உருப்படியான – பார்வையோ, திட்டமோ இல்லை.

வெறுமனே அஹிம்சை வழிப் போராட்டம், ஜனநாயக ஆர்ப்பாட்டம் என்றெல்லாம் பீலா விடுவதை நிறுத்தி விட்டு, தங்கள் திட்டம் என்ன, மார்க்கம் என்ன, செயற்பாடு யாது, செல்நெறிப் பாதை எது, எத்தகையது என்தை மக்கள் முன்வைக்க கூட்டமைப்புத் தலைவர்கள் தயாராக வேண்டும்.

வெறுமனே அவர்களை எம்.பியாக்குவதற்கு மட்டும் ஒவ்வொரு முறையும் வாக்களித்து விட்டுத் தமிழர்கள் வாளாவிருப்பதில் அர்த்தமில்லை.

“தமிழர் விடயங்களில் அரசுக்கு ஒத்துழைப்பு” – என்று தமிழரசுத் தலைவர் அறிவிப்பதும் கூட குழப்பமான ஒன்றே. என்னென்ன விடயங்களில், எப்படி, எப்படி ஒத்துழைப்பு, இல்லையேல் மாற்று நடவடிக்கை என்ன என்பதை எல்லாம் தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

தமிழரின் உரிமைகள் “மயிலே! மயிலே! இறகு போடு” என்பது போலக் கேட்டு வாங்கி விட முடியாது. சில சமயங்களில் பிடுங்கி எடுக்கவும் வேண்டியிருக்கும்.

அதற்கு மாற்றான வழி என்ன என்பதை தமிழர் பிரதிநிதிகள் தமது மக்கள் முன் தெளிவாக வைக்க வேண்டும்.

தென்னிலங்கை பௌத்த, சிங்கள பேரினவாதத்தின் நாடியைத் தடவி சலுகை பெற்றுத் தரப் போகின்றார்களா? அல்லது உயிரூட்டமான போராட்டங்களை நடத்தி உரிமையைப் பிடுங்கி எடுத்துத் தரப் போகின்றார்களா?

ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை தொகுதி மக்களிடம் உஷார் பேசிக் காலத்தை இழுத்தடிக்கும் திட்டத்தைக் கைவிட்டு விட்டு, உண்மையான – தெளிவான – வழிகாட்டலை மக்கள் முன்வைப்பதற்கு அவர்கள் முன்வர வேண்டும்.

# தொழிற் சட்டங்களை மீற யாருக்கும் அனுமதியில்லை

## கூறுகின்றார் அமைச்சர் டக்ளஸ்



கொழும்பு, மே 31

தொழில் நடைமுறைகள் தொடர்பில் அரசால் கொடுக்கப்பட்டுள்ள ஆலோசனைகள் மற்றும் சட்ட நடைமுறைகளை அனைவரும் ஏற்று செயற்பட வேண்டும். அத்தகைய சட்ட வரையறைகளை மீற எவருக்கும் அனுமதி கிடையாது என் கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்தில் சுருக்கு வலை மீன்பிடியினால் சிறுதொழில் கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் சட்டவிரோத மீன்பிடியாளர்களால் ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு தொடர்பில் தீர்வு காண்பதற்கான ஆராய்வுக் கூட்டம் கடற்றொழில் மற்றும் நீரக வள மூலங்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இன்று தலைமையில் நடைபெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திருமலை மாவட்டத்தின் உப்புவெளி பிரதேச சபை மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மாவட்டத்தின் 46 கடற்றொழிலாளர் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு தத்தமது பிரச்சினைகள் தொடர்பில் தெரியப்படுத்தியிருந்தனர்.

இதன்போது திருமலை மாவட்டத்தில் சுருக்குவலை தொழிலை முன்னெடுப்பதற்கு ஒரு தரப்பினர் ஆதரவு தெரிவித்திருந்த நிலையில் மற்றொரு தரப்பினர் எதிர்ப்பபு வெளியிட்டிருந்தனர்.

குறிப்பாக சுருக்குவலை தொழிலை முன்னெடுப்பவர்கள் அதற்காக கொடுக்கப்பட்ட வரையறைகளை மிறி செய்றபடுவதாகவும் இதனால் பலர் மீது வழக்குகள் கூட இருப்பதாகவும் சட்டிக்காட்டி அத்தொழிலை நிறுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். ஆனால் அத்தொழிலை முன்னெடுக்க ஒருதரப்பினர் தமது நியாயங்களை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில் இரு தரப்பினரது நியாயங்களையும் கேட்டறிந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மாவட்டத்திற்கு மாவட்டம் தொழிலின் தன்மைகள் மாறுபட்டு இருக்கின்றது. சுருக்குவலை தொழிலுக்கான சட்டங்கள் நாடுமுழுவதும் ஒரேமாதிரியாக இருப்பதால் தொழிலாளர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க நேரிடுகின்றது. இதனால் இது தொடர்பில் மாவட்டத்திற்கு மாவட்டம் மாறுபடக் கூடிய சட்டவரையறைகள் உருவாக்கப்படவேண்டியது அவசியமாகும்.

இது தொடர்பான சட்டவரையறைகளை சீர்திருத்துவதற்கான பத்திரமொன்றை அமைச்சரவையில் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கின்றேன் என்பதுடன் அதுவரை அரசின் தொழில் சட்ட வரைமுறைகளை மீற எவருக்கும் அனுமதி இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

இச்சந்திப்பின்போது அமைச்சின் அதிகாரிகள் மற்றும் திருமலை மாவட்ட கடற்றொழில் திணைக்களப் பணிப்பாளர், கடற்படையினர் துறைசார் அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டு பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்ந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையே படகுச்சேவை திங்கள் முதல் வழமைக்கு



நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையான படகுச் சேவைகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை முதல் வழமைபோல இடம்பெறவுள்ளதாக நெடுந்தீவு பிரதேச செயலாளர் எப்.சி. சத்தியசோதி அறிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

கோரோனா தாக்கத்தின் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த நெடுந்தீவு - குறிகாட்டுவான் படகுச் சேவைகள் கடந்த மார்ச் 20ஆம் திகதி தொடக்கம் இடைநிறுத்தப்பட்டன.

நெடுந்தீவு - குறிகாட்டுவான் இடையிலான படகு சேவைகள் நாளைமறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் வழமைபோன்று இடம்பெறும். வடதாரகை காலை 8 மணிக்கு குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவு புறப்பட்டு மாலை 4 மணிக்கு மீண்டும் குறிகாட்டுவானை வந்தடையும்.

ஏனைய படகு சேவைகளும் வழமை போன்று சேவையில் ஈடுபடும். மேலும் கொரோனா தொற்று காரணமாக சமூக இடைவெளியை பேணியே பொதுமக்கள் படகுகளில் பயணிக்க வேண்டியுள்ளதன் காரணமாக மேலதிக படகு சேவைகள் நடத்தப்படும் - என்றார்.

# தொண்டமானுக்கு அஞ்சலி



யாழ்ப்பாணம், மே 31

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான மறைந்த ஆறுமுகன் தொண்டமானுக்கு யாழ்ப்பாணத்தில் இன்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாண நண்பர்கள் அமைப்பின் ஏற்பாட்டில், நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்திற்கு அருகாமையில் பருத்தித்துறை வீதியில் வைத்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது அன்னாரது உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, மறவன்புலவு க.சச்சிதானந்தன், வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, இந்து பௌத்த ஒற்றுமைக்கான அமைப்பு செயலாளர் சி.மோகன், இந்து மற்றும் பௌத்த குருமார்கள் உள்ளிட்ட சிலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இந்திய – சீன எல்லைப் பிரச்சினை பிரதமர் மோடியுடன் டிரம்ப் பேச்சு



**வொஷிங்டன்,மே30**

**சீன எல்லைப் பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் மோடியுடன் தாம் பேசியுள்ளார் என அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தெரிவித்துள்ளார். லடாக் எல்லையில் சீனா படைகளைக் குவித்து இருப்பதால், இந்தியாவும் அங்கு தனது படைப் பலத்தை அதிகரித்து வருகிறது. இதனால் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டு உள்ளது.**

இந்த நிலையில் கடந்த புதன்கிழமை 'டுவிட்டர்' பதிவு ஒன்றை வெளியிட்ட அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையேயான எல்லை பிரச்சினையில் சமரசம் செய்து வைக்கத் தயார் என்று கூறி இருந்தார்.

இதுபற்றி வெளியுறவுத்துறையின் செய்தித்தொடர்பாளர் அனுராக் ஸ்ரீவஸ்தவாவிடம் நேற்று முன்தினம் நிருபர்கள் கருத்து கேட்ட போது, அவர் நேரடியாக பதில் அளிக்காமல், பிரச்சினைக்கு அமைதியான முறையில் தீர்வு காண நாங்கள் சீனாவுடன் பேச்சு நடத்திக் கொண்டு இருக்கிறோம் என்று மட்டும் கூறினார். இதன்மூலம் டிரம்பின் சமரச முயற்சியை இந்தியா நாசூக்காக நிராகரித்துவிட்டது.

இந்த நிலையில், டிரம்ப் நேற்று வெள்ளை மாளிகையில் நிருபர்களுக்குப் பேட்டி அளித்தார்.

அப்போது அவர் கூறியவை வருமாறு:–

இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே பெரிய மோதல் ஏற்பட்டு இருக்கிறது. இரு நாடுகளும் தலா 140 கோடியே 40 லட்சம் மக்கள் தொகையை கொண்ட நாடுகள். இரு நாடுகளிடமும் சக்திவாய்ந்த இராணுவம் உள்ளது. எல்லைப் பிரச்சினையில் இந்தியா மகிழ்ச்சியாக இல்லை, இதேபோல் சீனாவும் மகிழ்ச்சியாக இல்லை.

இந்தியாவில் என்னை நேசிக்கிறார்கள். நான் பிரதமர் மோடியை மிகவும் விரும்புகிறேன். அவர் ஒரு 'ஜென்டில் மேன்'. நான் அவரை தொடர்பு கொண்டு பேசினேன். சீனாவுடன் பிரச்சினை இருந்து வருவதால் அவர் நல்ல மனநிலையில் இல்லை.

இப்போதும் கூறுகிறேன். அமெரிக்காவிடம் உதவி கேட்கப்பட்டால் இரு நாடுகளுக்கும் இடையே சமரசம் செய்து வைக்க தயாராக இருக்கிறேன். – என்று டிரம்ப் கூறினார்.

## கொரோனா பீதியால் 80 வயதுத் தாயாரை வீட்டுக்குள் அனுமதிக்க மறுத்த மகன்மார்

### தெலுங்கானா மாநிலத்தில் சம்பவம்

கொரோனா பயம் காரணமாக 80 வயது தாயாரை வீட்டுக்குள் அனுமதிக்க மறுத்தனர் மகன்மார்.

தெலுங்கானா மாநிலம், கரீம் நகரை அடுத்த கிசான் நகர் பகுதியைச் சேர்ந்தவர்



சியாமளா. 80 வயதான இவர் உறவினர் வீட்டு நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக மராட்டிய மாநிலம் சோலாப்பூர் சென்றார்.

கொரோனா வைரஸ் காரணமாக நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டமையால், 80 வயதான பாட்டி அங்கிருந்து சொந்த ஊருக்கு திரும்ப முடியாமல் தவித்தார். உறவினர் வீட்டிலேயே தங்கியிருந்தார்.

ஊரடங்கு தளர்த்தப்பட்டு, பயணத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து அவர், கார் மூலம் ஐதராபாத் வந்தார். அங்கிருந்து பஸ்சில் கரீம் நகர் வந்தடைந்தார். அங்குள்ள தனிமைப் படுத்தப்பட்ட முகாமில் தங்கியிருந்தார். இதற்கான முத்திரையும் அவருக்கு வைக்கப்பட்டது.

தனது தாயார் ஊருக்கு வருகிறார் என்பதை கேள்விப்பட்ட அவரது மகன்கள் கொரோனா பயம் காரணமாக அவரை வீட்டுக்குள் அனுமதிக்க மறுத்துவிட்டனர்.

அவரது மூத்த மகன் நரசிம்மா வீட்டின் வெளிக் கதவை பூட்டிவிட்டார். இதனால் வயதான அந்த தாயார் வீட்டின் முன்பு காலை 7 மணியிலிருந்து 1 மணி வரை காத்திருந்தார்.

கதவை திறக்காததால், சியாமளா அங்கிருந்த 2 ஆவது மகனான ஈஸ்வரா வீட்டிற்கு சென்றார். அவரும் கொரோனா பீதி காரணமாக தனது தயாரைவீட்டுக்குள்அனுமதிக்கவில்லை.

80 வயதான தனது தாயாரை வீட்டுக்குள் அனுமதிக்காததை மூத்த மகன் நரசிம்மா நியாயப்படுத்தினார். இது தொடர்பாக அவர் கூறும்போது, 'கர்ப்பிணியான எனது மகள் வீட்டில் இருக்கிறாள். அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுவிடக் கூடாது என்று கருதி, எனது தாயாரை அனுமதிக்கவில்லை' என்றார். 2 ஆவது மகன் ஈஸ்வரா கூறும்போது, 'நான் வாடகை வீட்டில் குடியிருக்கிறேன். அது சிறிய வீடு, இதனால் எனது தாயாரை அனுமதிக்கவில்லை' என்றார்.

2 மகன்களும் வீட்டிற்குள் அனுமதிக்காததால், தள்ளாத வயதில் சியாமளா பெரிதும் பாதிக்கப்பட்டார். இதைத்தொடர்ந்து அக்கம் பக்கத்தில் உள்ளவர்களும், சுகாதார அதிகாரிகளும் அவரது மகன்களிடம், அவரது தாயாரின் உடல்நிலை பற்றி விளக்கினார்கள். அவருக்கு கொரோனா எதுவும் இல்லை என்று தெரிவித்தனர். இதை மூத்த மகன் நரசிம்மா ஏற்றுக் கொண்டு, தனது தாயாரை வீட்டுக்கு அழைத்து சென்றார்.

## வெட்டுக்கிளிகளின் படையெடுப்பைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்!

### தமிழக அரசிடம் மு.க.ஸ்டாலின் வற்புறுத்தல்

வெட்டுக்கிளிப் படையெடுப்பைத் தடுக்கத் தகுந்த பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை

நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் எனத் தமிழக அரசுக்கு தி.மு.க. தலைவர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், நாட்டின் வடமேற்கு மாநிலங்களில் பாலைவன வெட்டுக்கிளிகள் படையெடுத்துப் பயிர்களைச் சேதப்படுத்துவதைக் குறிப்பிட்டுள்ளார். தமிழகத்தின் கிருஷ்ணகிரி, நீலகிரி மாவட்டங்களில் வெட்டுக்கிளிகள் படையெடுப்பால் அங்குள்ள மக்கள் பதற்றமடைந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

பாலைவன வெட்டுக்கிளிகளுக்கும், நமது மண்ணின் வெட்டுக்கிளிகளுக்கும் வேறுபாடு உண்டு என்றாலும் அதன் தாக்கம் குறித்துக் கவனமாக இருக்க வேண்டும் எனச் சூழலியலாளர்கள் கூறுகின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

வெட்டுக்கிளிகளால் இழப்பு ஏற்படும் என்கிற அச்சம் விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் ஏற்பட்டு விடாமல் தடுக்கத் தகுந்த பாதுகாப்பு மற்றும் முன்னெச்சரிக்கை நடவடிக் கைகளைத் தமிழக அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

## ஜம்மு – காஷ்மீரில் பிடிக்கப்பட்ட சந்தேகத்துக்குரிய புறா விடுவிப்பு

பாகிஸ்தான் உளவு பணிக்கு பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்திய நிலையில், ஜம்மு – காஷ்மீரில் பிடிபட்ட புறா, இன்று விடுவிக்கப்பட்டது.

எல்லை கட்டுப்பாடு கோடு பகுதியை யொட்டிய வீட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை அந்த புறா பிடிபட்டது. புறாவின் இறக்கையில் இளம்சிவப்பு அடையாளமும், காலில் இருந்த வளையத்தில் சில எண்களும் இருந்தமையால் அது, பாகிஸ்தானின் உளவு வேலைக்கு பயன்படுத்தப்பட்டிக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியது.

இது குறித்து பொலிஸார் விசாரணை நடத்திவந்த நிலையில் பாகிஸ்தானைச் சேர்ந்த கிராமவாசி ஒருவர்,



அது பந்தய புறா என்றும், அந்த எண் தனது செல்போன் என்றும் தெரிவித்து, அதை விடுவிக்க கோரிக்கை விடுத்தார். இதையடுத்து அந்த புறாவை, அது முன்பு பிடிபட்ட இடத்திலேயே கொண்டு சென்று பொலிஸார் வியாழக்கிழமை விடுவித்தனர்.

## மண்ணுக்குள் இருந்து சிசு உயிருடன் மீட்கப்பட்டது

### லக்னோ பகுதியில் சம்பவம்

புதிதாகப் பிறந்த குழந்தை ஒன்று மண்ணில் உயிருடன் புதைக்கப்பட்ட நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட பதைபதைப்பான சம்பவம் லக்னோ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

உத்தரப்பிரதேசத்தில் சனவுரா கிராமத்தில் சித்தார்த்நகர் பகுதியில் கடந்த 25 ஆம் திகதி, வீடு கட்டுவதற்கான வேலைகள் பரபரப்பாக நடந்து கொண்டு இருந்தன. அப்போது அங்கிருந்த மண்ணின் உள்ளே பிஞ்சு குழந்தை ஒன்று அழும் சத்தம் கேட்டு திடுக்கிட்டனர். வேலை பார்த்தவர்கள் கண்டு அதிர்ச்சியடைந்துள்ளனர்.

இதையடுத்து உடனடியாக அப்பகுதியைத் தோண்டி பார்த்து, குழந்தை உயிருடன் இருந்ததால், உடனடியாக அருகில் இருக்கும் மருத்துவமனைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

அப்போது குழந்தையைச் சோதித்துப் பார்த்த மருத்துவர்கள், வாயில் மட்டும் மண் போய் உள்ளது எனவும் குழந்தையின் உயிருக்கு எந்த ஒரு ஆபத்தும் இல்லை என்றுத் தெரிவித்துள்ளனர். இதையடுத்து தொடர்ந்து குழந்தைக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த குழந்தையின் தாய், தந்தையர் யார் என்பது குறித்த தகவல்கள் வெளியாகவில்லை.



# அமெரிக்க அதிபரின் அழைப்பு நிராகரித்தார் ஜேர்மன் பிரதமர்

அமெரிக்காவில் நடைபெறும் ஜி7 உச்சி மாநாட்டில் பங்கேற்குமாறு அதிபர் டிரம்ப் விடுத்த அழைப்பை ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கல் நிராகரித்து விட்டார் என தகவல் வெளியாகியுள்ளது.

ஊரடங்கை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு, அமெரிக்காவில் ஜி – 7 உச்சி மாநாட்டை நடத்துவதை விட சிறந்த முன்னுதாரணம் இருக்க முடியாது என டிரம்ப் கருதுகிறார் என வெள்ளை மாளிகை தெரிவித்திருந்தது. அதன்படி, வொஷிங்டனில் ஜூன் மாத இறுதியில் ஜி – 7 நாடுகளின் உச்சி மாநாடு நடைபெற உள்ளது.

இதில் பங்கேற்குமாறு அதிபர் டிரம்ப் விடுத்த அழைப்புக்கு ஜேர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கல் நன்றி தெரிவித்தார்



என அந்நாட்டு அரசின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார். எனினும், தற்போதைய கொரோனா பேரிடர் நிலைவரத்தைக் கருத்தில் கொண்டு, வொஷிங்டனுக்குப் பயணம் செய்து, மாநாட்டில் நேரடியாகப் பங்கேற்க இயலாது என மெர்க்கல் கூறினார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

# விண்கலத்தின் எரிபொருள் நிரப்பி சோதனையில் வெடித்துச் சிதறியது

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் விண்கலம் ஒன்று எரிபொருள் நிரப்பி சோதனை செய்யப்பட்ட போது வெடித்துச் சிதறியது.

அந்த நிறுவனத்தின் புரோட்டோ வகையைச் சேர்ந்த 4ஆவது விண்கலம் துருப்பிடிக்காத எஃகினால் செய்யப்பட்டிருந்தது. எஸ்.என். 4 என்று பெயரிடப்பட்ட அந்த விண்கலம் மீண்டும் பயன்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

அந்த விண்கலத்தில் உள்ள உந்து சக்தி இயந்திரம் குறித்து சோதனை மேற்கொள்ளப்பட்டது. இதற்காக விண்கலத்தில் திரவ நைட்ரஜன் நிரப்பப்பட்டிருந்தது. அமெரிக்காவின் டெக்ஸாஸ் பகுதியில் உள்ள



போக்காசிக்காஎன்ற இடத்தில் சோதனை செய்யப்பட்டது. அப்போது எதிர்பாராதவிதமாக விண்கலம் வெடித்துச் சிதறியது.

இந்தச் சூழ்நிலையில் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திற்கு நாசா வீரர்களை அழைத்துச் செல்லும் ஃபால்கன் ராக்கெட் கடந்த வியாழன் அதிகாலை ஏவுவது தள்ளிப்போனது. இந்நிலையில் இன்று அந்த விண்கலம் ஏவப்படுவதாக இருந்த சூழலில் வானிலை சாதகமாக இருந்தால் பிற்பகலில் ஃபால்கன் 9 ஏவப்பட வாய்ப்பு இருப்பதாக, நாசா தலைவர் ஜிம் பிரிடென்ஸ்டைன் தெரிவித்திருந்தார்.

# உலகின் மிகவும் அதிக வயதான மனிதர் இங்கிலாந்தில் மரணம்



உலகின் மிக வயதான மனிதராக கருதப்பட்ட இங்கிலாந்தைச் சேர்ந்த பொப் வெயிட்டன் மரணமடைந்தார்.

ஆல்டன் பகுதியில் வசித்து வந்த இவர், கடந்த மார்ச் மாதம் 29 ஆம் திகதி தனது 112 ஆவது பிறந்தநாளைக் கொண்டாடினார்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த வெயிட்டன், தூக்கத்திலேயே நேற்று உயிர்பிரிந்து விட்டார் என அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

உலகின் மிக வயதான நபராகக் கருதப்பட்ட 112 வயதான ஜப்பானின் சிட்டெட்சு வட்டனபே பெப்ரவரி மாதம் காலமானதை அடுத்து, பொப் வெயிட்டன் உலகின் மிக அதிக வயதான மனிதராக இருந்து வந்தார்.

# இரு செயற்கைக்கோள்களை விண்ணிற்கு அனுப்பியது சீனா



சீனா புதிய தொழில்நுட்பங்களுடன் இரு செயற்கைக்கோள்களை வெற்றிகரமாக விண்ணிற்கு அனுப்பியது.

சிச்சுவான் மாகாணத்தில் உள்ள ஜிச்சாங் ஏவுதளத்தில் இருந்து லாங் மார்ச் – 11 கேரியர் ராக்கெட் விண்ணில் ஏவப்பட்டது.

இதன் மூலம் திட்டமிட்ட சுற்றுப்பாதையில் புவியைக் கண்காணிக்கும் புதிய தொழில்நுட்ப செயற்கைக் கோள்கள் இரண்டும் பொருத்தப்பட்டன. இந்த திட்டப் பணி முழுவதும் வெற்றிகரமாக நிறைவு பெற்றதாக ஏவுதள மைய நிர்வாகி டோங் சோங்கிங் தெரிவித்துள்ளார்.

# உடலில் அம்பு துளைத்த போதும் அநாயசமாகப் பறக்கும் கடல்புறா

இங்கிலாந்தில் சுமார் 2 அடி நீளமுள்ள அம்பினால் துளைக்கப்பட்ட கடல் புறா ஒன்று சர்வசாதாரணமாக உலாவிக் கொண்டிருப்பது ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.



பிளாக்பூல் என்ற இடத்தில் கடல் புறா ஒன்று சாலையில் உலாவிக் கொண்டிருந்தது. அந்தப் பறவையின் உடலில் சுமார் 2 அடி நீளம் கொண்ட அம்பு துளைத்திருப்பதைக் கண்ட அப்பகுதியைச் சேர்ந்த சிலர் அதனைப் பிடிக்க முயன்றபோது, அனாயசமாகப் பறந்து சென்றது. பறவைகளை வேட்டையாடுபவர்கள் கடல் புறா மீது அம்பை எய்திருக்கலாம் என்று கூறியுள்ள பறவையியல் ஆய்வாளர்கள், படுகாயத்தின் போதும் குறிப்பிட்ட பறவை உயிர் வாழ்வது ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாகத் தெரிவித்துள்ளனர்.

# கொரோனாத் தடுப்பூசி, சிகிச்சைக்கு 37 நாடுகள் இணைந்து கூட்டு முயற்சி



கொரோனாவுக்கான தடுப்பூசி, சிகிச்சை முறையை, உலக அளவில் தங்குதடையின்றி கிடைக்கச் செய்யும் நோக்கில், உலக சுகாதார நிறுவனமும், 37 நாடுகளும் இணைந்து புதிய கூட்டுமுயற்சியைத் தொடங்கியுள்ளன.

வளர்ந்த நாடுகளில், கொரோனாவுக்குத் தடுப்பூசி கண்டறிய நூற்றுக்கும் மேற்பட்ட ஆராய்ச்சித் திட்டங்கள் பெரும் பொருள்செலவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தடுப்பு மருந்து கண்டறியப்படும் பட்சத்தில், காப்புரிமை தொடர்பான காரணங்களால், அத்தகைய மருந்துகள் கிடைப்பதில் சிக்கல் ஏற்படலாம் என சிறிய மற்றும் வளரும் நாடுகளில் அச்சம் நிலவுகிறது.

இந்நிலையில், உலக சுகாதார நிறுவனமும், 37 வளரும் நாடுகளும் இணைந்து C - TAP என்ற இந்த கூட்டு முயற்சியை தொடங்கியுள்ளன.

அரசுகள், நிறுவனங்கள் இதில் இணையலாம் என்றும், பொது உரிமை மற்றும் திறந்த முறையில் ஆராய்ச்சியை ஊக்குவிப்பது இதன் நோக்கம் என்றும் உலக சுகாதார நிறுவன தலைவர் டெட்ராஸ் அதானோம் தெரிவித்துள்ளார்.

# உலக சுகாதார நிறுவனத்துடனான உறவைத் துண்டித்து அமெரிக்கா!

## டொனால்ட் டிரம்ப் அதிரடி அறிவிப்பு

உலக சுகாதார அமைப்புடனான அமெரிக்க உறவுகளைத் இன்று முதல் துண்டித்து கொள்வதாக ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலை எதிர்த்து போராட உலக சுகாதார அமைப்பு சரியாக செயல் படவில்லை என அமெரிக்க டொனால்டு டிரம்ப் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகிறார்.

உலக சுகாதார அமைப்பு சீனாவின் கைப்பாவை, எந்தவொரு நாடும் வழங்காத நிதியை உலக சுகாதார நிறுவனத்திற்கு அமெரிக்கா ஆண்டுதோறும் சுமார் 45 கோடி டொலர் வழங்கி வருகிறது. ஆனால் நாங்கள் சரியாக நடத்தப்படவில்லை.

உலகசுகாதார அமைப்பு கணிசமான முன்னேற்றங்களை எடுக்கா விட்டால் நிதி முடக்கம் நிரந்தரமாகிவிடும் எனக் கூறி இருந்தார்.

இந்நிலையில் ஜனாதிபதி டொனால்டு டிரம்ப் வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார், அப்போது அவர் கூறியதாவது:-



கொரோனா வைரஸ் பரவலை எதிர்த்து போராடுவதற்கு ஆரம்ப கட்டத்தில் உலக சுகாதார அமைப்பு போதுமானதைச் செய்யத் தவறிவிட்டது.

நாங்கள் கோரிய மற்றும் பெரிதும் தேவைப்பட்ட சீர்திருத்தங்களைச் செய்யத் தவறியதால், உலக சுகாதார அமைப்புடனான எங்கள் உறவை நாங்கள் இன்று முதல் துண்டித்து கொள்ளப் போகிறோம்.

கொரோனா வைரஸ் குறித்து சீனா விடம் இருந்து உலகிற்கு பதில்கள் தேவை. எங்களுக்கு வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும். – என கூறினார்.


# அரசு இணையதளங்களின் மீது இன்று காலை சைபர் தாக்குதல்

**இன்று காலை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மற்றும் பொது நிர்வாக அமைச்சு உள்ளிட்ட பல அரசு இணையதளங்களை குறிவைத்து சைபர் தாக்குதல்கள் நடந்தன என இலங்கை விமானப்படையின் சைபர் பாதுகாப்பு தலைமையகம் தெரிவித்துள்ளது.**

இந்தத் தாக்குதலை சைபர் பாதுகாப்பு அதிகாரிகள் கண்காணித்து, உடனடியாக சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்குத் தகவல் தெரிவித்தனர்.

இலங்கை கணினி அவசர தயார்நிலை குழு / ஒருங்கிணைப்பு மையம் (SLCERT CC) இணைய தாக்குதல்கள் குறித்து உறுதிப்படுத்தியமையுடன் அத்தளங்களை மீட்டெடுக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.

இலங்கை கணினி அவசர தயார்நிலை குழுவின் தகவல் பாதுகாப்பு பொறியாளர் ரவிந்து மீகாஸ்முல்லா கூறுகையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக போர் வீரர்களை நினைவுகூரும் நோக்கில் சைபர் தாக்குதல்கள் நடந்துள்ளன, கடந்த இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது இந்த தாக்குதலால் ஏற்பட்ட தாக்கம் இந்த ஆண்டு ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளது. இந்த தாக்குதல்களைத் முற்றாக தடுக்க



எமது குழுவால் பல நடவடிக்கைகள் எடுத்த போதிலும் அவ்வகை தாக்குதல்களை குறைக்க மட்டுமே எங்களால் முடிந்தது என்று கூறினார்.

# வெடிபொருள்கள் மீட்பு!



வவுனியா, மே 30

வவுனியா ஈச்சங்குளம் பகுதியில் உள்ள வீட்டு காணியிலிருந்து வெடிபொருள்களை ஈச்சங்குளம் பொலிசார் இன்று மீட்டுள்ளனர்.

வவுனியா ஈச்சங்குளம் – சாளம்பன் பகுதியில் உள்ள தனியார் காணியை அதன் உரிமையாளர் உழவியந்திரம்மூலம்பண்படுத்தியுள்ளார். இதன்போது சந்தேகத்திற்கிடமான பொருட்கள் காணப்பட்டன.

பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து விரைந்த பொலிசார் குறித்த பகுதியை சோதனை செய்து பார்த்தபோது இரண்டு செல்களை அவதானித்தனர்.

அங்கு மண்ணில் புதையுண்டு மேலும் வெடி பொருள்கள் அதனுள் இருக்கலாம் என்று தெரிவித்த பொலிஸார், நீதிமன்றின் அனுமதியுடன் அந்தப் பகுதியை ஆழமாக்கி சோதனை மேற்கொள்ளவுள்ளதாகக் கூறினர்.

# முன்னாள் ஆளுநர் மார்ஷல் பெரேரா இன்று கொழும்பில் காலமானார்



ஊவா மாகாண முன்னாள் ஆளுநர் மார்ஷல் பெரேரா இன்று காலமாகியுள்ளார்.

தனது 89 ஆவது வயதில் கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில்சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் காலமாகியுள்ளார்.

ஊவா மாகாண ஆளுநர் உட்பட பல பதவிகளை வகித்துள்ள இவர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவின் தந்தை என்பது குறிப்பிடத்தக்கது.

# அம்பாறையில் வெள்ளி மாலை திடீரெனப் பெரும் காற்று, மழை

அம்பாறை,மே31

அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களில் வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் திடீரென வீசிய பலத்த காற்று மற்றும் மழையினால் பொதுமக்கள் சிரமத்திற்கு உள்ளாகினர்.

அம்பாறை நகரப்பகுதி காரைதீவு, கல்முனை, மருதமுனை, பெரியநீலாவணை,நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு ,மணல்சேனை மற்றும் சம்மாந்துறை , சவளைக்கடை ,மத்திய முகாம் போன்ற பகுதிகளில் வீசிய சுழல் காற்றுக் காரணமாக வீதிகளில் அதிகளவிலான தூசு மண் வீசப்பட்டன. இதனால் பயணிகள் அசௌகரியத்திற்கு உள்ளாகினர். சில பகுதிகளில் பாரிய மரங்கள் முறிந்து விழுந்துள்ளதால் வீதிப் போக்குவரத்துக்கு தடைகள் ஏற்பட்டன.

சில பகுதிகளில் மின்சாரமும் துண்டிக்கப்பட்டிருந்ததுடன் மழை நீர் தேங்கி வெள்ள நிலைமை ஏற்பட்டிருந்தது.

தற்போது காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக பொதுமக்கள் மற்றும் மீனவர்கள் விழிப்புடன் செயற்படுமாறு பல்வேறு தரப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்கள் பலவற்றிலும் நீண்ட இடைவேளைக்குப் பின்னர் மாலை வேளையில் கடும் காற்றுடன் மழையும் பெய்து வருகின்றது.இதனால் தற்போது கடல் கொந்தளிப்பாகக் காணப்படுவதோடு, மீனவர்கள் கடலுக்குச் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக, மீனவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.







காலைக்கதிர் Kalaikathir

குரங்குக் கூட்டம்

16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி



நாளைய (31.05.2020) தலைப்பு
குரங்குக் கூட்டம்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலை யில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# கொரோனா போராட்டத்திக்கு இருபது கோடி ரூபா ஒதுக்கீடு

கொரோனாவுக்கு எதிரான போராட்டத்திற்கு அரசாங்கம் மேலும் இருபது கோடி ரூபா ஒதுக்கியுள்ளது. இந்த நிதியொதுக்கீட்டினை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அனில் ஜயசிங்க உறுதிப்படுத்தினார்.

கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை விரைவாக அதிகரித்து வருவதனால் சுகாதார அமைச்சு மற்றும் ஆயுதப்படைகள் தனிமைப் படுத்தல் வசதிகளை வழங்க போராடி வரும் நிலையில் இத்தொகை ஒதுக்கப்படுள்ளது.

நாட்டிக்குள் நுழையும் அனைத்து விமான பயணிகளையும் பி.சி.ஆர். சோதனைகளுக்கு உட்படுத்தும் வாய்ப்பையும் சுகாதார அமைச்சகம் ஆராய்ந்து வருகிறது

அதே நேரத்தில் கடற்படை வீரர்கள் மற்றும் வெளிநாட்டிலிருந்து திரும்பிய இலங்கையர்களிடையேயும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தவண்ணமுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# இராணுவப் பின்னணியையுடைய ஆளுநர்; வடக்கிற்கு வேண்டாம் என்கிறா சிவமாகன்



இராணுவ பின்னணியையுடைய ஒருவரை வடக்கு மாகாண ஆளுநராக ஏற்கமுடியாது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் சிவமோகன் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்திற்கு புதிய ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட உள்ளார் எனவும் அவர் இராணுவ பின்னணியையுடையவர் எனவும் கடந்த நாள்களில் செய்திகள் வெளியாகிய நிலையில், செய்தியாளர்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் –

ஏற்கனவே நாடு முழுவதும் இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளது. கொரோனாவை விட இந்த அச்சம் மக்களைத் துன்புறுத்துகிறது. ஆனால் கொரோனா வைரஸை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதற்காக இதனை பொறுத்துக்கொண்டுள்ளார்கள்.

இந்நிலையில் வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் ஆளுநருக்குப் பதிலாக இராணுவ பின்னணியுடைய ஒருவர் நியமிக்கப்படவுள்ளார் எனத் தெரியவருகிறது. அதனை ஏற்க முடியாது.

இந்த அரசு தமிழ் மக்களை ஓர் அச்ச சூழலுக்குள் வைத்திருக்கவே நினைக்கிறது.

அப்படியான எண்ணத்தை உடனடியாக மாற்ற வேண்டும். தமிழ் சிவில் அதிகாரிகளையே வடக்கு மாகாண ஆளுநராக அரசு நியமிக்க வேண்டும்.

தமிழர்களை பழிவாங்கும் பேரினவாத சிந்தனையிலிருந்து அரசு விடுபட வேண்டும்.

அல்லது இந்த அரசின் அராஜகத் தன்மைகளுக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள்.– என அவர் தெரிவித்துள்ளார்.

# பயணிகளுக்கு பாதுகாப்பான சூழலை கட்டுநாயக்கவில் வழங்க நடவடிக்கை







நேற்று முன்தினம் வியாழக்கிழமை சுற்றுலா மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் பிரசன்னா ரணதுங்க, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி, இராணுவ தளபதி சர்வேந்திர சில்வா மற்றும் விமான நிலைய அதிகாரிகள் கொண்ட குழுவினர் விமான நிலையத்தின் அமைப்பு மற்றும் வசதிகள் குறித்து பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டனர்.

ஆய்வு விஜயத்தின் போது, அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் கோவிட் -19 பரவுவதைத் தடுக்க விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை அவதானித்தனர். விமான நிலையத்தில் எடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் அவதானித்த அவர்கள் இந்தக் கடினமான நேரத்தில் விமான நிலைய பணியாளர்கள் அர்ப்பணிப்புடன் சேவையில் ஈடுபடுகின்றமையைப் பாராட்டினர்.

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் தலைவர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி விமான நிலையத்தை மீண்டும் திறந்தவுடன் பயணிகள் எவ்வாறு கையாளப்படுவர் என்ற விளக்கத்தை அதிகாரிகளுக்கு தெளிவுபடுத்தினார்.

# இறுதிக்கிரியைகளை அரசியலாக்காமல் இருப்பதை உறுதிப்படுத்தவே ஊரடங்கு?



ஆறுமுகன் தொண்டமானின் இறுதிக் கிரியைகளில் மகனால் நடத்தப்படுவதாகக் கூறப்படும் அரசியல் பிரசாரங்களை நிறுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ரா ஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார் என சில ஊடகங்களில் தகவல் வெளியாகியுள்ளது.

இறுதிச் சடங்கு தொடர்பான சில புகைப்படங்களைப் பார்த்த சுகாதார அதிகாரிகள் இதனை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுசென்ற நிலையில், அதிருப்தியடைந்த ஜனாதிபதி இவற்றை உடனடியாக நிறுத்துமாறும், உடனடியாக ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துமாறும் உத்தரவிட்டுள்ளார் எனவும் ஜனாதிபதி செயலகத் தகவல்களை மேற்கோள் காட்டி அந்த ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் மேலும் தெரியவருபவை வருமாறு:–

கொழும்பில் இருந்து தொண்டமானின் பூதவுடல் வேவல்டணிற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அதன்போது அங்கு பெருந்திரளான மக்கள் கூடியமையுடன், பூதவுடல் பேரணியாக எடுத்துச் சென்றபோது ஊடகங்களில் வெளியாகிய புகைப்படங்களை அவதானித்த ஜனாதிபதி கோட்டாபய கோபமடைந்தாராம். இறுதிக் கிரியைகளில் அரசியல் பிரசாரங்களை நிறுத்துமாறுஅவர் உத்தரவு பிறப்பித்தார் என ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தப் பின்புலத்திலேயே ஆறுமுகன் தொண்டமானின் இறுதிக்கிரியைகள் நடைபெறும் நுவரெலியாவில் இரு நாள்கள் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அமைச்சர் ஆறுமுகம் தொண்டாமானின் மகன் ஜீவன் தொண்டமான் தேர்தல் சட்டங்களையும் தனிமைப்படுத்தல் சட்டங்களையும் மீறியுள்ளார் என சுட்டிக்காட்டியுள்ள தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம், தேர்தல் ஆணைக்குழுவும் பொலிஸாரும் இது குறித்து அலட்சியமாகயிருப்பதாகவும் மௌனம் சாதிப்பதாகவும் குற்றம்சாட்டியுள்ளது.

# அரசியலுக்குள் நுழையும்போதே ஜீவனுக்கு அழுத்தமும் வருகிறது

## தேர்தல் கண்காணிப்பு அமைப்பு பாய்ச்சல்

மறைந்த ஆறுமுகம் தொண்டாமானின் மகன் ஜீவன் தொண்டமான் தேர்தல் சட்டங்களையும் தனிமைப்படுத்தல் சட்டங்களையும் மீறியுள்ளார் என தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவரின் செயற்பாடுகள் குறித்து தேர்தல் ஆணைக்குழுவும் பொலிஸ் தரப்பும் அலட்சியமாக இருக்கின்றன எனவும் மௌனம் சாதிக்கின்றன எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

நுவரேலியாவில் தனது தந்தையின் பூதவுடல் ஏற்றப்பட்ட வாகனத்துடன் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டமை தேர்தல் விதிமுறைகளை மீறும் செயலெனத் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் தேசிய ஒருங்கிணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய சூழ்நிலையில் அரசியல் கட்சிகளும் அரசியல்வாதிகளும் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடமுடியாது எனக் குறிப்பிட்டுள்ள அவர், இவ்வாறான நடவடிக்கைகளைக் கண்காணித்து தடுக்கவேண்டியது தேர்தல் ஆணைக்குழுவின் கடமையெனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள சமூக இடைவிலகலை நடைமுறைப்படுத்த வேண்டியது பொலிஸாரின் கடமை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# யாழ்ப்பாணத்தில் டெங்கு நோய் பரவும் அபாயம்

## பொது மருத்துவ நிபுணர் பேரானந்தராஜா விளக்கம்

யாழ்ப்பாணம், மே 30

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இவ் வருடம் இன்றுவரையான 5 மாதங்களில் 2 ஆயிரத்து 195 பேர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே மக்கள் தமது சுற்றாடலை சுத்தமாக வைத்திருக்காவிட்டால் டெங்கு நோயிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள முடியாது என்று யாழ் போதனா வைத்தியசாலை பொது மருத்துவ நிபுணர் தம்பிப்பிள்ளை பேரானந்தராஜா தெரிவித்தார்.

தற்போதைய டெங்கு தாக்கம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே மருத்துவ நிபுணர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தற்போது டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்கக்கூடிய சாத்திய கூறுகள் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் காணப்படுகின்றது. எனவே டெங்கு நோயிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான முயற்சியில் சுகாதாரப் பிரிவினர் ஈடுபட்டுள்ளனர். யாழ் மாவட்டச் செயலாளர், அடுத்த வாரத்தை டெங்கு விழிப்புணர்வு வாரமாக அறிவித்துள்ளார்.

டெங்கு நோய் கடந்த 20 வருடமாக இலங்கையின் பல பகுதிகளிலும் தாக்கி வரும் நோய் குறிப்பாக 15 தொடக்கம் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களையும் சிறுவர்களையும் இந்த நோய் பாதிப்பு ஏற்படுத்தும். இது நுளம்பினால் பரப்பப்படும் ஒரு நோயாகும்.

இந்த நோயினால் கடந்த வருடம் இலங்கையில் ஒரு லட்சத்துக்கு அதிகமான மக்கள் பாதிக்கப்பட்டு இருந்தார்கள். அதில் யாழ்ப்பாணம் மாவட்டத்தை பொறுத்தவரை கடந்த வருடம் எண்ணாயிரம் பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு இருந்தார்கள். அவர்களுக்குரிய சிகிச்சைகள் உரிய முறையில் வழங்கப்பட்டது. எனினும் இந்த வருடம் மே மாதம் வரை 2 ஆயிரத்து 195 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களுக்கு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் ஏனைய வைத்தியசாலைகளிலும் சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது.

ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டது. ஏனெனில் அந்த காலப்பகுதியில் மழைவீழ்ச்சி அதிகம் காணப்பட்டமையினால் குறித்த தாக்கம் அதிகரித்து காணப்பட்டது.



அதேபோல் கடந்த மாதம் பெய்த மழையின் காரணமாக மீண்டும் டெங்கு நோயின் தாக்கம் அதிகரிக்க கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது. குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கூடுதலாக சங்கானை, உரும்பிராய், நீர்வேலி மற்றும் சுண்டுக்குளி போன்ற இடங்களில் இருந்து நோயாளர்கள் கூடுதலாக வருவதை நாங்கள் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது.

எனவே இந்த நோய் நுளம்பினால் பரவுகின்ற ஒரு நோயாகும். சிரட்டை, ஜோக்கட் கப், ஐஸ்கிரீம் கப், தகரப்பேணிகள் இப்படியானவற்றினை நாங்கள் அவதானம் இல்லாமல் கண்ட இடங்களில் எறியும் போது, மழை நீர் தேங்கி நின்று அந்த நீரில் நுளம்புகள் முட்டையிடும். அந்த முட்டை பொரித்து 5 தொடக்கம் 10 நாள்களுக்குள் அது நுளம்பாக மாற்றமடைந்து டெங்கு வைரஸினை காவிக்கொண்டு மக்களினை கடிப்பதன் மூலம் இந்த நோய் பரவுகின்றது.

இந்த நுளம்புகள் குறிப்பாக மாலை வேளைகளில்தான் அதிகமாக மக்களை தேடிச்சென்று கடிக்கின்றது. எனவே மக்கள் வீடுகளில் இருக்கும் போது மாலை நேரங்களில் தமது அறையின் கதவுகளை சாத்திவிட்டு இருப்பது மிகவும் சிறந்தது. அல்லாவிட்டால் கொல்லி மருந்துகள் மற்றும் நுளம்புத்திரி போன்றவற்றினை கொளுத்தி வீடுகளில் வைப்பதன் மூலம் குறித்த நுளம்புத் தாக்கத்தில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதன் மூலம் டெங்கு நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும் – என்றார்.

## இந்தியா, ஆஸியிலிருந்து 304 பேர் நாடு திரும்பினர்

கொழும்பு, மே 30

கொரோனா வைரஸ் தாக்கத்தை அடுத்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையினால் இலங்கைக்கு வர முடியாமல், ஆஸ்ரேலியாவிலும் இந்தியாவிலும் சிக்கியிருந்த இலங்கையர்கள் 304 பேர் இன்று நாட்டை வந்தடைந்தனர்.

ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸின் 02 விசேட விமானங்கள், இன்று அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தன.

முதலில் இந்தியா, மும்பாய் நகரில் சிக்கியிருந்த இலங்கையின் முப்படை வீரர்கள் 18 பேரை ஏற்றிய ரீலங்கன் எயார்லைன்ஸின் யு.எல். 1042 எனும் விசேட விமானம் இன்று அதிகாலை 4.45 மணிக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

இதனைத் தொடர்ந்து, ஆஸ்ரேலியாவின் மெல்பர்ன் நகரில் சிக்கியிருந்த இலங்கையர்கள் 286 பேரை ஏற்றிய ஸ்ரீ லங்கன் எயார்லைன்ஸின் ஷீஸி 605 எனும் விசேட விமானம், அதிகாலை 5.50 மணிக்கு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது.

இவ்வாறு வருகை தந்த அனைவரும் தனிமைப்படுத்தலுக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஊரடங்கு உத்தரவை மீறிய 66,835 பேர் கைது

கொழும்பு, மே 30

நேற்று இரவு 10 மணி முதல் இன்று அதிகாலை 4 மணி வரையான ஊரடங்கு நேரத்தில் ஊரடங்கு உத்தரவை மீறிய 173 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

53 வாகனங்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மார்ச் 20 முதல் இன்று காலை வரை மொத்தம் 66,835 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த காலகட்டத்தில் பொலிஸா கைப்பற்றிய வாகனங்களின் எண்ணிக்கை 18831 ஆகும்.

மார்ச் 18 முதல் இன்று காலை 4 வரை ஊரடங்கு உத்தரவை மீறியதாக 23707 பேர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பாக 9,494 பேருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## வவுனியாவில் ஆறுமுகனுக்கு அஞ்சலி

வவுனியா, மே 30

முன்னாள் அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான ஆறுமுகம் தொண்டமானுக்கு வவுனியாவில் இன்று பல்வேறு அமைப்புக்களினால் அஞ்சலி செலுத்தப்பட்டது.

வவுனியா கூமாங்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் பொது அமைப்புக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த அஞ்சலி நிகழ்வின்போது அன்னாரது உருவபடத்திற்கு நினைவுச் சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் நினைவுப் பேருரையும் இடம்பெற்றது.

இதேவேளை, வவுனியா மன்னார் வீதியில் அமைந்துள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் அலுவலகத்திலும் அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## தொண்டாவின் அமைச்சு பிரதமர் மஹிந்தரின் வசம்

ஆறுமுகன் தொண்டமானுக்கு வழங்கப்பட்டிருந்த சமூக வலுவூட்டல், தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுப் பதவியை நடைபெறவுள்ள நாடாளுமன்ற தேர்தல் முடியும் வரை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் கீழ் கொண்டுவர ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை தொண்டமானின் அமைச்சை, மஹிந்த ராஜபக்ஷ பதவிப்பிரமாணத்துடன் பொறுப்பேற்பார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 26ஆம் திகதி திடீரென ஆறுமுகன் தொண்டமான் உயிரிழந்தார். அதனையடுத்து அவரது இடத்துக்கு மகன் ஜீவன் தொண்டமான் வேட்பாளராக அறிவிக்கப்பட்டிருந்தார். இந்நிலையிலேயே தொண்டமானின் அமைச்சு மஹிந்தவிடம் கொடுக்கப்பட்டுள்ளது.

## வெலிகமவில் துப்பாக்கிச் சூடு ஒருவர் காயம்; சுட்டவர் கைது

வெலிகம பகுதியில் துப்பாக்கிச் சூட்டு சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் வெலிகம – மிரிஸ்ஸவிலுள்ள மீன்பிடி துறைமுகமொன்றில் இன்று காலை இடம்பெற்றுள்ளது.

இத்துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்ட சந்தேக நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 3 பொலிஸார் பணி நீக்கம்

மொரட்டுவ, சொய்சபுர பகுதியில் இருந்த உணவகம் ஒன்றின் மீது இனந்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகம் தொடர்பில் மூன்று பொலிஸார் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் குறித்த உணவகத்தில் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் மூவரே இவ்வாறு பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.


# மன்னாரில் பனைசார் உற்பத்தி தொழில் மேற்கொள்வோர் தொடர்ந்தும் பாதிப்பு

மன்னார், மே 30

மன்னார் பிரதேசச் செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட மன்னார் தீவுப்பகுதிக்குள் பனை உற்பத்தி சார்ந்த தொழிலை மேற்கொள்ளும் சுமார் 8 கிராமங்களைச் சேர்ந்த 300 குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழந்து பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தக் கிராம மக்கள் கூலித்தொழிலையும் விறகு வெட்டுதல், மட்டை வெட்டுதல், பனங்கிழங்கு மற்றும் ஒடியல் தயாரித்தல் போன்ற காலத்திற்கு ஏற்ற பனைசார்ந்த தொழிலையும் மேற்கொண்டு நீண்ட காலமாக தங்களது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வந்தனர்.

எனினும் தற்போது மிக பின் தள்ளப்பட்டுள்ள நிலையிலுள்ள குறித்த வாழ்வாதார தொழிலை மேற்கொள்ளும் மக்கள் கொரோனா நோய் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் வறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். உணவுக்குக் கூட போதிய பணம் இல்லாத சூழ்நிலைக்குள் வாழ்ந்து வருகின்றனர்.



அதாவது நாளாந்தம் சேகரித்து தயாரிக்கப்பட்ட மட்டைக்கட்டுகள், விறகுகள் மற்றும் நாளாந்த முயற்சியினால் தயாரிக்கப்பட்ட ஒடியல் என்பன வீடுகளில் விற்பனைக்காக தயார் நிலையில் காணப்பட்ட போதும் அவைகள் முடக்கப்பட்ட நிலையில் தேங்கிக்கிடப்பதாக கவலை தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு பெரும்பாலான வீடுகளில் பல்லாயிரக்கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்த உற்பத்திப் பொருள்கள் விற்பனை செய்ய இயலாத நிலை காணப்படுகின்றது.

இந்த வாழ்வாதாரத்தை இழந்து உணவிற்குக் கூட கஸ்டத்தை எதிர் கொள்ளும் 8 கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது துயரங்களுக்கு கை கொடுக்க உதவுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.05.2020 இல் வெளியிடப்பெற்றது.